# குடும்ப வன்முறை

## காவற்துறையினரால் வீட்டிலிருந்து வெளியேற்றப்படல் மற்றும் திரும்பிவரத் தடை விதித்தல்

## குற்றவியல் சட்டம்

## குடியியற் சட்டப் பாதுகாப்பு நடவடிக்கை

வன்முறைக்கு எதிரான Graubünden தலையீட்டுத் திட்டத்தின் இந்தத் தகவல் சிற்றேடு Graubünden மாநிலத்தின் அனைத்துக் காவல் நிலையம் மற்றும் ஆண்கள், பெண்களுக்கான சம வாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றில் இலவசமாகக் கிடைக்கும்.

இந்தச் சிற்றேடு சம வாய்ப்பு அலுவலகத்தின் இணையத் தளத்தில் www.stagl.gr.ch பின்வரும் மொழிகளில் பெற்றுக் கொள்ளலாம்: ஜெர்மன் மொழி, இத்தாலிய மொழி, ரோமானிய மொழி, அல்பேனிய மொழி, ஆங்கிலம், போர்த்துக்கேய மொழி, சேர்போ குரேஷிய மொழி, ஸ்பானிய மொழி, தமிழ் மற்றும் துருக்கிய மொழி.

(Wappen des Kantons Graubünden)

# குடும்ப வன்முறையை சகித்துக்கொள்ள முடியாது!

வீட்டுக்குள் நடக்கும் வன்முறை தனிப்பட்ட விடயமுமல்ல அதைப் பொறுத்துக்கொள்ளவும் முடியாது. சிறுமைப்படுத்துதல், மது, அழுத்தம், ஆத்திரமூட்டல் ஆகிய அதிகாரங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. இவ்வாறான விடயங்களைச் செய்யும் நபரே வன்முறைக்குப் பொறுப்பானவராவார். வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு மற்றும் உதவிக்குப் பாத்தியதை உள்ளவராவார்கள்.

வன்முறைப் பண்புள்ள சூழலில் வளரும் குழந்தைகளின் முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்படும். அவர்களுக்குப் பிரத்தியேக உதவியும், அவதானிப்பும் அவசியம். காவற்துறையினருக்கு வீட்டில் நடக்கும் ஒரு குடும்ப வன்முறை பற்றித் தெரியவரும் பட்சத்தில், அவர்கள் உடனடியாகக் குழந்தைகளுக்குப் பொறுப்பான பாதுகாவலர் மையத்திற்கு அறியத் தருவார்கள்.

இந்தச் சிற்றேடு குடும்ப வன்முறை சம்மந்தமான முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. அவசரகால அட்டையில் உதவி வசதிகள் மற்றும் நிறுவனங்களின் மிக முக்கியமான முகவரிகளைக் காணலாம்.

இந்த வசதிகள் உங்களுக்கு எந்நேரமும் கிடைக்கும்:

**நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பின் என்ன செய்யலாம்?**
ஒரு அவசரமான ஆபத்தான நிலமையில் உடனடியாகக் காவற்துறையினரின் பாதுகாப்பு அல்லது உதவியை நாடவும்:

**அவசர அழைப்பு 117**

காவற்துறையினர், வன்முறையால் மற்றவருக்கு ஆபத்து விளைவிக்கும் நபர்களை வீட்டிலிருந்து, அதன் சூழலிலிருந்து உடனடியாக வெளியேற்ற முடியும். அடிப்படையில் வன்முறையால் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அவரின் குழந்தைகளுக்கு அவர் வசித்த இடத்தில் இருக்க உரிமை உள்ளது.

**நீங்கள் எங்கே தகவல், உதவி மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம்?**

**பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனை மையம்**
Opferhilfe-Beratungsstelle des Kantons Graubünden
081 257 31 50

இந்த ஆலோசனை மையம் உங்கள் தனிப்பட்ட மற்றும் சட்டபூர்வமான கேள்விகளுக்குத் தகவல், உதவி மற்றும் ஆலோசனையை வழங்குவதோடு, அவசியப்படின் மேலதிகமான பிற மையங்கள் அல்லது நபர்களை உங்களுக்குப் பரிந்துரை செய்யும். இந்த ஆலோசனை கட்டணமில்லாதது. உங்கள் விருப்பங்கள் இரகசியமாகப் பேணப்படும். உங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் தொழில்முறை ரகசியத்தைப் பேணக் கடமைப்பட்டிருக்கிறார். இந்த ஆலோசனை உங்களால் எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படலாம்.

**பாதுகாப்பு, உதவி மற்றும் ஆலோசனையை நாடுகிறீர்களா?**
**பெண்கள் பாதுகாப்பு மையம்**
**Frauenhaus Graubünden**
**081 252 38 02**

பெண்கள் பாதுகாப்பு மையம் பாதிக்கப்பட்ட பெண்கள், அவர்களின் குழந்தைகள் மற்றும் இளம் பெண்பிள்ளைகளை அரவணைத்து, பாதுகாப்பு மற்றும் ஆலோசனையை வழங்குகிறது.

**நீங்கள் அடித்துத் துன்புறுத்துகிறீர்கள் அல்லது வன்முறை அச்சுறுத்துகிறீர்களா?**

**வன்முறையில் ஈடுபடுபவருக்கான ஆலோசனை மையம்**
**Beratungsstelle für Gewalt ausübende Personen**
**079 544 38 63**

நீங்கள் பிரச்சனைகளில் ஒரு வன்முறையற்ற போக்கைக் கையாள நாங்கள் உதவுவோம். இந்த ஆலோசனை கட்டணமற்றது. உங்கள் விருப்பங்கள் இரகசியமாகப் பேணப்படும்.

## அதிகமாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

## காவற்துறையினரால் வீட்டைவிட்டு வெளியேற்றப்படல் மற்றும் திரும்பிவரத் தடைவிதித்தல்

**சட்டம் யாரைப் பாதுகாக்கிறது?**

வன்முறை தம்பதிகள் அல்லது துணைகளுக்கிடையிலா அல்லது குடும்பத்திலா என்பது பற்றிய எந்தப் பாரபட்சமுமின்றி, குடும்ப வன்முறையை அனுபவிக்கும் ஒவ்வொரு நபரையும் பாதுகாக்கிறது. வன்முறையால் பாதிக்கப்பட்ட நபர் Graubünden மாநிலத்தில் வசித்தல் வேண்டும். விடுமுறைக்கு வந்து தங்கும் விருந்தினருக்கும் அதே பாதுகாப்பு உண்டு.

**யார் வெளியேற்றப்படலாம்?**

கூட வசிப்பவர்களுக்கு ஆபத்து விளைவிப்பவர்கள். முழு வயதை அடையாத வன்முறையாளர்களை காவற்துறையினர் வெளியேற்ற முடியாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதுகாவலர் அலுவலகத்துடன் கலந்தாலோசித்து ஒரு வழி கண்டுபிடிக்கப்படும்.

**காவற்துறையினரால் திரும்பிவர விதிக்கப்படும் தடை எத்தனை நாள் நீடிக்கும்?**
காவற்துறையினர் முடிவெடுக்கும் காலம், ஆகக் கூடியது 10 நாட்கள்.

**திரும்பிவர விதிக்கப்படும் தடை நீட்டிக்கப்படும் சந்தர்ப்பமுள்ளதா?**
ஆம். வெளியேற்றப்படும் காலத்தில் பாதிக்கப்பட்ட நபர் மாவட்ட நீதிமன்றம் திருமணப் பாதுகாப்பு (தம்பதியர்) அல்லது ஷரத்து 28b ZGB சட்டப் பிரகாரம் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தூரத்தில் நிறுத்தி வைக்கக் கோரி மனு அளிக்கலாம்.

**வெளியேற்றப்பட்ட நபர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எப்படி?**
வெளியேற்றப்பட்ட காலத்தில் தடை உத்தரவை எதிர்த்து மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

**இந்த வெளியேற்றம் பாதிக்கப்பட்டவரின் விருப்பத்துடன் சம்மந்தப்பட்டுள்ளதா?**
இல்லை. பாதிக்கப்பட்டவர் பயம் அல்லது அவமானம் காரணமாக வெளியேற்றத்தை விரும்பமாட்டாராயினும் கடும் ஆபத்து நிகழக்கூடுமாயின் காவற்துறையினர் அதை நிகழ்த்துவர். இந்த வெளியேற்றம் காவற்துறையினரின் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகும்.

**வீடு யாருக்குச் சொந்தமானது என்பது பொருட்படுத்தப்படுமா?**
இல்லை. ஆபத்து விளைவிக்கும் எவரையும் காவற்துறையினர் வெளியேற்றலாம்.

**வீட்டுச் சாவிக்கு என்ன நிகழும்?**
காவற்துறையினர் வெளியேற்றப்பட்ட நபரிடமிருந்து சாவியை வாங்கிப் பாதிக்கப்பட்டவரிடம் கையளிப்பர்.

**வெளியேற்றப்படும் நபர் காவற்துறையினர் அணுகக்கூடியவாறு இருத்தல் வேண்டுமா?**
ஆம். அதிகாரபூர்வமான ஆவணங்கள் வழங்குவதற்காகக் காவற்துறையினருக்கு அவர் ஒரு முகவரியை அளித்தல் வேண்டும்.

**வெளியேற்றப்படும் நபர் எதை எடுத்துச் செல்லலாம்?**
தனிப்பட்ட நபருக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்கள். (உ-ம்: தனிப்பட்ட ஆவணங்கள், உடை, அடையாள அட்டை, மருந்துகள்)

**இவ் வெளியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட நபருக்கு வீட்டுச் செலவுக்குத் தேவையான பணம் இல்லாவிடில் அவர் என்ன செய்ய முடியும்?**
வெளியேற்றப்படும் நபர் குடும்பச் செலவை ஏற்கக் கடமைப்பட்டுள்ளார், வெளியில் இருக்க வேண்டிய காலகட்டத்தில் தேவையான பணத்திற்கு அவர் உத்தரவாதமளித்தல் வேண்டும். இல்லாத சமயத்தில் சமூகசேவை மையத்தின் மூலம் உதவியளிக்கப்படும்.

**திரும்பிவர விதிக்கப்படும் தடை எந்த வலயங்களுக்குச் செல்லுபடியாகும்?**
வீட்டுக்கும், வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும். உதாரணமாக நடைபாதைகள், படிகள், நிலவறை, சலவை செய்யும் அறை, முற்றம், தோட்டம் மற்றும் நுழைவாயில்கள். வெளியேற்றும்போது காவற்துறையினர் பாதுகாப்பு வலயத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். ஆபத்துக்குள்ளான நபர் வெளியேற்றம் சம்மந்தமான ஆவணத்தின் எழுத்துப் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வார்.

**வன்முறையில் ஈடுபடும் நபர் அவராகப் போகாவிடில் என்ன நிகழும்?**
காவற்துறையினர் பலத்தை உபயோகித்து வன்முறையில் ஈடுபடும் நபரை வெளியேற்றுவர்.

**வன்முறை பற்றிக் காவற்துறையினருக்குத் தாமதமாக அறியத்தரும் சந்தர்ப்பத்திலும் வெளியேற்றம் மற்றும் திரும்பிவரத் தடை ஆகியவை நிகழ்த்தப்படுமா?**
ஆம், பாதிக்கப்பட்ட நபர் தொடர்ந்தும் துஷ்பிரயோகம் குறித்து அஞ்சும் சந்தர்ப்பத்தில்.

**திரும்பிவர விதித்த தடை பின்பற்றப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படுமா?**
காவற்துறையினர் எச்சமயத்திலும் அதைக் கண்காணிக்கலாம்.

**வெளியேற்றப்பட்ட நபர் திரும்பிவர விதித்த தடையைத் துஷ்பிரயோகம் செய்தால் என்ன செய்யலாம்?**
இந்தச் சந்தர்ப்பத்தில் உடனடியாகக் காவற்துறையினரை அழைத்தல் வேண்டும். அவர்கள் வெளியேற்றப்பட்ட நபரை உடனே அகற்றுவர், தேவைப்படின் பலவந்தமாக அகற்ற நேரும். அத்துடன் இத் தடை மீறல் தண்டனைக்குரியது (அதிகாரபூர்வமான கட்டளையை மீறுதல்), இதற்கு அபராதம் விதித்துத் தண்டனை அளிக்கப்படும்.

**வெளியேற்றப்பட்ட நபர் மீண்டும் அமைதியடையும் பட்சத்தில் திரும்பிச் செல்ல முடியுமா?**
இல்லை, கட்டளையிடப்பட்ட காலத்தில் வர முடியாது. திரும்பிச் செல்வதற்கு ஒத்துக்கொள்ளும் பட்சத்திலும், வெளியேற்றப்பட்ட நபர் தண்டனைக்குள்ளாவார்.

**வெளியேற்றப்பட்ட நபர் வீட்டிலிருந்து மேலதிகமான பொருட்களை எடுக்கும் தேவையிருப்பின்?**
வெளியேற்றப்பட்ட நபர் மிக அவசரமாகத் தேவைப்படும் பொருட்களை எடுக்க வேண்டுமெனில், அது காவற்துறையினர் முன்னிலையிலேயே நிகழ்தல் வேண்டும்.

**பாதிக்கப்பட்டவருக்கான உதவி ஆலோசனை மையம் உங்களுடன் தொடர்பு கொள்வதை விரும்புகிறீர்களா?**
நீங்கள் எழுத்துமூலம் ஒத்துக் கொண்டால், காவற்துறையினர் உங்கள் தனிப்பட்ட ஆவணங்களை ஆலோசனை மையத்திற்கு அனுப்புவார்கள். பிற்பாடு அவர்கள் உங்களுடன் தொடர்பு கொள்வார்கள். நீங்கள் முதலில் தொடர்பை மறுத்திருந்தாலும், தேவைப்படின் எந்த நேரத்திலும் நீங்களாக ஆலோசனை மையத்தைத் தொடர்புகொள்ளலாம்.

**வெளியேற்றப்பட்ட நபர் எங்கே ஆலோசனை பெறலாம்?**
வெளியேற்றப்பட்ட நபர் பற்றி வன்முறையில் ஈடுபடுபவருக்கான ஆலோசனை மையத்தில் அறியத் தரப்படும். ஆலோசனை மையம் வன்முறையில் ஈடுபடும் நபருடன் தொடர்பு கொண்டு ஒரு ஆலோசனை வாய்ப்பை அளிக்கும்.

வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்க்க விரும்பும் அனைத்து நபர்களுக்கும் கட்டணமில்லாது இந்த ஆலோசனை வழங்கப்படும்.

**பாதுகாவலர் அலுவலகத்திற்கு எப்பொழுது அறியத் தரப்படும்?**
பாதிக்கப்பட்ட வீட்டில் குழந்தைகள் இருப்பின், தெளிவுபடுத்துவதற்காக காவற்துறையினர் இந்தச் சம்பவம் பற்றி அதற்குப் பொறுப்பான பாதுகாவலர் மையத்திற்கு அறியத் தருவர்.

**வன்முறையில் ஈடுபடும் நபரைக் காவற்துறையினர் சிறைக்காவல் வைக்க முடியுமா?**
ஆம், உதாரணமாக அவர் மது அல்லது போதைப் பழக்கத்திற்கு ஆளானவர் எனில் அல்லது வெளியேற்றக் கட்டளைக்குப் பணியாதவரெனில். அநேக தருணங்களில் திரும்பிவர விதிக்கப்பட்ட தடையுடனான வெளியேற்றம் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு அல்லது ஆகக் குறைந்தது ஆபத்தைக் குறைப்பதற்குப் போதுமானதாக இருக்கும்.

**சிறைக்காவல் மற்றும் காவற்துறையினரால் வெளியேற்றப்படல் மற்றும் திரும்பிவரத் தடை விதித்தல் ஆகியவற்றைச் சமகாலத்தில் பிரயோகிக்க முடியுமா?**
ஆம், வன்முறையில் ஈடுபடும் நபர் முதலில் காவலில் வைக்கப்பட்டாலும், வெளியேற்றம் மற்றும் திரும்பிவரத் தடை ஆகிய தீர்ப்பு வழங்கப்படும். சேர்ந்திருக்கும் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் பட்சத்தில் சச்சரவு அதிகமாகுமாதலால், இந்தச் சந்தர்ப்பத்தில் காவற்துறையின் தடை மிகவும் முக்கியம்.

**என்னுடைய கணவன் அல்லது மனைவி காவற்துறையினரால் வெளியேற்றப்படின் நான் என்னுடைய வதிவிட அனுமதியை இழக்க நேருமா?**
இல்லை. காவற்துறையினரால் வெளியேற்றப்படும் காலத்தில் வதிவிட அனுமதியைத் திருப்புவது பற்றி ஆராயப்பட மாட்டாது.
நீண்ட பிரிவு நேரின் ஆலோசனை மையங்களில் தனிப்பட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளப் பரிந்துரைக்கிறோம். வதிவிட அனுமதியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு, மற்ற காரணிகளுடன் சேர்ந்து வீட்டில் அனுபவித்த வன்முறையைச் சாட்சியமும் முக்கியமாகலாம்.

**குழந்தைகள் நடுவில் – வீட்டின் வன்முறையின் சாட்சிகளாகக் குழந்தைகள்**
எப்போதும் வீட்டு வன்முறையில் குழந்தைகள் சாட்சிகளாகச் சம்மந்தப்படுகிறார்கள். இணைகளுக்கிடையில் நடக்கும் வன்முறையைப் பார்த்து வளரும் குழந்தைகளின் சூழ்நிலை, அறிவுத்திறன், சமூக மற்றும் உணர்வு முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது

அவர்கள் நேரடியாகத் தாக்கப்படாவிட்டாலும், பிற்காலத்தில் வன்முறையை எதிர்கொள்ளும்போது, பாதிக்கப்பட்டவராக அல்லது வன்முறையில் ஈடுபடுபவராகப் பெரும் இடருக்குள்ளாவார்கள்.

ஆதலால் வீட்டு வன்முறையில் காவற்துறையினர் வெளியேற்றப் பணிக்கிறார்களோ இல்லையோ, பாதுகாவலர் மையத்திற்கு அது பற்றி அறியத் தருவார்கள்.

குழந்தைப் பாதுகாப்புக்கான மையம் உங்கள் குழந்தைக்கான சிகிச்சை வழிகள் பற்றி உங்களுக்குத் தகவல் மற்றும் ஆலோசனை அளிப்பர்.

## குற்றவியல் சட்டத்தில் குடும்ப வன்முறை
சுவிற்சர்லாந்தின் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பலவற்றை உள்ளடக்கியிருக்கிறது, ஆனாலும் எல்லா வகையான வீட்டு வன்முறைகளும் குற்றத்தின் கீழ் வரா. பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெரும்பாலும் மருத்துவப் பராமரிப்பு, ஆலோசனை, உள்நாட்டுச் சட்டப் பாதுகாப்பு மற்றும் நிதி உதவி அவசியமாகும்.

**வீட்டு வன்முறை எவ்வாறிருக்கும்?**
உதாரணமாக, அறைதல், மிதித்தல், குத்துதல், கடித்தல், கீறுதல், அடித்து நொறுக்குதல், திருகுதல், ஆயுதம் எடுத்தல், மிரட்டுதல், கீழ்ப்படிவதற்குப் பலவந்தப்படுத்தல், உள் வைத்துப் பூட்டுதல், கண்காணித்தல், கருவி கொண்டு அடித்தல், கத்தியால் குத்துதல், சுடுதல்.

**குற்றப் புகாரின்றிய விசாரணை என்றால் என்ன?**
குற்றப் புகாரின்றிய விசாரணை என்பது, பாதிக்கப்பட்டவர் மூன்று மாதங்களுக்குள் குற்றப் புகார் அளிக்காவிடினும், வன்முறையில் ஈடுபட்ட நபரை விசாரிப்பதாகும். காவற்துறையினர் பாதிக்கப்பட்டவரின் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு நடவடிக்கை எடுப்பதற்குக் கடமைப்பட்டுள்ளனர்.

**புகாரின்றிய விசாரணையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய குடும்ப வன்முறைகள் யாவை? (குற்றமாகக் கருதக் கூடியவை)**
(ஆபத்தான பொருளால், நஞ்சால் அல்லது ஆயுதத்தால் நிகழ்த்தப்பட்ட) சாதாரண மற்றும் கடுமையான உடற் காயங்கள், கட்டாயப்படுத்துதல், பாலியல் கட்டாயப்படுத்துதல், பலாத்காரம் மற்றும் கொலை ஆகியவை பாதிக்கப்பட்ட நபரின் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

சாதாரண உடற் காயங்கள், தம்பதிகளிடையே திரும்பத் திரும்ப நடக்கும் தாக்குதல்கள் மற்றும் மிரட்டல் ஆகிய வீட்டு வன்முறைகள், பதிவுசெய்யப்பட்ட ஓரின ஜோடிகள் மற்றும் பதிவுசெய்யப்படாத ஜோடிகள் மற்றும் ஓரின ஜோடிகள் ஆகியோரும் புகாரின்றி விசாரணைக்கு உட்படுத்தப்படுவர். இந்த மேலதிகப் பாதுகாப்பு திருமணமான தம்பதியினர் மற்றும் பதியப்பட்ட ஜோடிகளுக்கு விவாகரத்துப் பெற்ற பின் அல்லது பதிவுசெய்யப்படாத ஜோடிகள் அல்லது ஓரின ஜோடிகள் பிரிந்த பின், ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படும்.

திருமணத் தம்பதியர், பதிவு செய்யப்பட்ட ஜோடிகள் தவிர மற்றவர்கள் எப்போதும் இப்படியான குற்றங்களுக்குப் புகார் அளித்தல் வேண்டும்.

**குடும்ப வன்முறையின் எத்தகைய குற்றங்கள் பாதிக்கப்பட்ட நபரின் புகாரின் பேரில் மட்டும் விசாரிக்கப்படும் (மனுவளித்த குற்றங்கள்)?**
உதாரணமாக பொருட்சேதம், ஒரு முறை தாக்குதல், வீட்டில் நிம்மதியிழத்தல், தொலைபேசி துஷ்பிரயோகம், பாலியல் துன்புறுத்தல்.

**குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில்?**
பெரியவர்களால் அவர்களின் பாதுகாப்பில் அல்லது பொறுப்பில் வளரும் குழந்தைகள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறை, நியமப்படி புகாரின்றி விசாரணை செய்யப்படும்.

## உள்நாட்டுச் சட்டப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### தம்பதியினர் | பதிவு செய்யப்பட்ட ஜோடிகள்

காவற்துறையினரால் திரும்பி வர விதித்த தடைக் கட்டளையை நீட்டிக்க விரும்பினால், மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் தம்பதியர் பாதுகாப்பு நடவடிக்கை | இடைக்காலக் கட்டுப்பாடு நடவடிக்கைக்கு மனுக் கொடுக்கலாம். இந்த மனு காவற்துறையின் முன் தலையீடு இன்றியும் செய்யலாம்.

**எப்படிப்பட்ட மனுக்களை வழங்கலாம்?**
உ-ம்:

- தம்பதியாக இருக்கும் வீட்டை ஒதுக்கீடு செய்தல்
- வீடு மற்றும் அண்மித்த சுற்றாடலில் வருவதற்குத் தடை விதித்தல்
- நெருங்குதல் மற்றும் தொடர்புகொள்ளத் தடை விதித்தல்
- குழந்தைகளுக்கான பாதுகாவலர் | அவர்களைப் பார்ப்பதற்கான உரிமை விதிமுறைகள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்
- வீட்டுச் செலவுக்கான பங்கீட்டைத் தீர்மானித்தல்

**வன்முறையை எவ்வாறு சாட்சிப்படுத்தலாம்?**
வீட்டு வன்முறை நம்பத் தகுந்ததாக இருத்தல் வேண்டும்.
சாட்சியங்களாகக் கூடியவை:

- மருத்துவர்களின் சாட்சியம் | காயங்களின் புகைப்படம்
- கடிதங்கள் | எஸ் எம் எஸ்
- (முன்கூட்டிய) தண்டனைத் தீர்ப்பு | காவற்துறையினர் மூலமான தகவல்கள் | வெளியேற்றப்பட்டதற்கான கட்டளை
- ஆலோசனை மையங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு மையங்களின் எழுத்துமூலமான தகவல்கள்

**வெளியேற்றப்பட்ட நபரிடம் உங்கள் புகார் குறித்து விசாரிக்கப்படுமா?**
ஆம், வெளியேற்றப்பட்ட நபருக்கு அவர் தரப்புப் புகாரைச் சொல்வதற்கும், சாட்சியங்களை அளிப்பதற்கும் உரிமை உள்ளது. நியமப்படி இரு தரப்பினரையும் விசாரித்ததன் பிற்பாடே நீதிமன்றம் முடிவெடுக்கும்.

**அவசரமான தற்காலிக முன்னேற்பாடுகள் என்ன?**
கால அவசரம் ஏற்படின், நீதிமன்ற விசாரணை நடக்கும் காலகட்டத்தில் சில தற்காலிக முன்னேற்பாடுகள் எடுக்க வேண்டியிருக்கும். உதாரணமாக பாதிக்கப்பட்ட நபரிடம் வீடு ஒப்படைக்கப்பட்டு, ஒரு தீர்வு காணும்வரை, ஆபத்தான நபர் அங்கு செல்வதற்குத் தடை விதிக்கப்படும். இந்த விடயங்கள் முக்கியமானவை. இதனால் தம்பதியர் பாதுகாப்பு நடவடிக்கைகள் | ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையில் ஏற்படும் தேக்கத்தைத் தவிர்க்க முடியும்.

**நீதிமன்ற விசாரணையின்போது நீங்கள் வெளியேற்றப்பட்ட நபரை எதிர்கொள்ளும் நிலை ஏற்படுமா?**
நீதிமன்றத்திலிருந்து இரு தரப்பினருக்கும் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்படும். உங்களுக்கு வன்முறையில் ஈடுபட்ட நபரை எதிர்கொள்ளுவதற்கு மனநிலை சரியாக இல்லையெனில், தனித்தனியாக விசாரிக்கக் கோருவதற்குப் பரிந்துரைக்கப்படும். இதனால் நேரடியான சந்திப்பு தவிர்க்கப்படும்.

**நீதிமன்றம் மற்றும் வழக்கறிஞர் கட்டணங்கள் என்ன?**
நீதிமன்ற மற்றும் வழக்கறிஞர் கட்டணம் செலுத்த முடியாவிடின், நீதிமன்றத்தில் இலவசச் சலுகைக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். உங்கள் பண விடயம் பற்றிய தகவல்களுடன் உங்கள் விருப்பம் ஆராயப்படும்.

**வெளியேற்றப்பட்ட நபர் நீதிமன்றக் கட்டளையான தடையை மீறினால் என்ன செய்யலாம்?**
உடனடியாகக் காவற்துறையைத் தொடர்புகொண்டு, நீதிமன்றத் தீர்ப்பை முன்வைக்கலாம். காவற்துறையினர் உடனடியாகத் தவறிழைத்த நபரை வெளியேற்றுவர்.

## பதிவு செய்யப்படாத ஜோடிகள் | பகிரப்பட்ட வீடு | முன்னாள் ஜோடிகள் | பின் தொடர்தல்

நீங்கள் பதிவுசெய்யப்படாத பந்தம் அல்லது பகிரப்பட்ட வீட்டில் வன்முறையில் ஈடுபடும் நபருடன் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் முன்னாள் துணைவரால் மிரட்டப்படுகிறீர்கள். உங்களுக்கு எந்த உறவுமில்லாத ஒரு நபர் உங்களை மிரட்டுகிறார் அல்லது பின் தொடர்கிறார்.

1. ஜூலை 2007இலிருந்து வன்முறையில் ஈடுபடும், மிரட்டும் அல்லது பின்தொடரும் நபர் எந்த உறவுமுறை என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல. வன்முறையிலிருந்து, மிரட்டலிலிருந்து அல்லது பின் தொடர்வதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதன் நிமித்தம், நெருங்கத் தடை, சுற்றாடலில் நடமாடும் தடை மற்றும் தொடர்புத் தடை விதிப்புக்கு நீங்கள் உங்களுக்குப் பொறுப்பான மாவட்ட நீதிமன்றத்தில் முறையிடலாம் (ஷரத்து. 28b ZGB). அத்துடன் வன்முறையில் ஈடுபடும் நபர் சேர்ந்து வாழ்பவராக இருக்கும் பட்சத்தில் மாவட்ட நீதிமன்றம் அவரை வெளியேற்றலாம். இந்த நடவடிக்கையும் நீங்கள் பாதுகாப்பு முன்னேற்பாடாகச் செய்ய இயலும். மாவட்ட நீதிமன்றம் உங்களுக்கு அளிக்கும் குறிப்பிட்ட தவணைக்குள், நீங்கள் உங்கள் முறையீடுகளை அனுப்புதல் வேண்டும். நீங்கள் முறையீடு செய்யாத பட்சத்தில், ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் திரும்ப நிறுத்தப்படும்.

கால அவசரம் ஏற்படின் அல்லது காவற்துறையினரால் வெளியேற்ற ஏற்பாடு நிகழ்த்தப்பட்டிருந்தால், நீதிமன்றம் எதிர்த் தரப்பை விசாரிக்க முன் சில தற்காலிக முன்னேற்பாடுகள் எடுக்க வேண்டியிருக்கும். இதனால் வெளியேற்றம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையில் ஏற்படும் தேக்கத்தைத் தவிர்க்க முடியும்.

## உங்கள் பாதுகாப்பைப் பேணுங்கள்!

புதிய சட்டவிதிமுறைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகப் பாதுகாப்பை வழங்குவதோடில்லாது வசித்த சூழலில் இருப்பதற்கான சந்தர்ப்பத்தையும் அளிக்கிறது. எப்படியிருப்பினும் அவை வன்முறையிலிருந்து உத்தரவாதமான பாதுகாப்பை வழங்கவில்லை! ஆதலால் ஆபத்தான நிலமைகளில், குறைந்த பட்சம் மிக ஆபத்தான கட்டம் தாண்டும் வரை நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் வீட்டை விட்டு வெளியேறி ஒரு பாதுகாப்பான இடத்தைத் (உ-ம்: பெண்கள் பாதுகாப்பு மையம்) தேடுவது அவசியமாகும். பிரிந்திருத்தல் மற்றும் விவாகரத்து நேரங்களில் அனுபவ ரீதியாக வன்முறை அதிகரிக்கிறது. ஆயுதம் வைத்திருத்தல், மது மற்றும் போதைமருந்து பாவித்தல், மிரட்டுதல், தற்கொலை மிரட்டல், மோசமான பொறாமை மற்றும் உரிமைகொண்டாடும் எண்ணம் ஆகியவை ஆபத்தை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாகும். ஒரு துஷ்பிரயோகச் சூழலிலிருந்து வெளியில் வருவது மிகக் கடினமானது, பெரும்பாலும் நீண்ட காலம் எடுக்கும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் வெளியிலிருந்து உதவியை நாடுவதும் ஒரு ஆதரவான சூழலை அமைத்துக் கொள்வதும் அவசியமாகும்.

Impressum:
Konzept, Text, Redaktion: Susanna Mazzetta, Bettina Joos
Fachliche Begleitung: Runder Tisch des Bündner Interventionsprojekts gegen Häusliche Gewalt, Arbeitsgruppe Broschüre
3. überarbeitete Auflage 2011

In Kooperation mit der Kantonspolizei Graubünden.

Bündner Interventionsprojekt gegen Häusliche Gewalt
Loestrasse 37, 7000 Chur (Logo)

## அவசரகால அட்டை

தம்பதியினர், ஜோடிகள் மற்றும் குடும்பத்தினிடை நடக்கும் வன்முறை

உங்கள் உறவுமுறையில் நிச்சயமற்று உணர்கிறீர்களா?
அச்சுறுத்தலாக உணர்கிறீர்களா அல்லது உங்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படுகிறதா?

குடும்ப வன்முறை தனிப்பட்ட பிரச்சனையல்ல!
இவ் விடயத்தில் உதவியும், ஆதரவும் உண்டு

அவசரகாலம் மற்றும் உதவி: காவற்துறை அழைப்பு 117

இங்கு தகவல்கள், உதவி மற்றும் ஆலோசனை பெறலாம்:

பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனை மையம்
Opferhilfe-Beratungsstelle des Kantons Graubünden Tel. 081 257 31 50

Loestr. 37

7000 Chur

24 மணி நேரமும் தொலைபேசியில் அழைக்கலாம்

www.gr.ch

குழந்தைகள் நேரடியாக வன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பின்:

மாநில வைத்தியசாலை, குழந்தைகள் சிகிச்சை நிலையம் Tel. 081 256 64 20

குழந்தைகள் பாதுகாப்பு மையம்
Fachstelle Kindesschutz Tel. 081 257 31 50

Loestr. 37

7000 Chur

24 மணி நேரமும் தொலைபேசியில் அழைக்கலாம்

www.gr.ch

குழந்தைகள் மற்றும் இளையோருக்கான தொலைபேசி உதவி Tel. 147

www.147.ch

**உங்களுக்குப் பாதுகாப்பு, உதவி மற்றும் ஆலோசனை தேவைப்படின்:**

### பெண்கள் பாதுகாப்பு மையம்

Frauenhaus Graubünden Tel. 081 252 38 02
24 மணி நேரமும் தொலைபேசியில் அழைக்கலாம்
www.frauenhaus-graubuenden.ch

**வன்முறையினால் நீங்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டால்**
**நீங்கள் மருத்துவ உதவியை நாடி, மருத்துவச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். உங்கள் குடும்ப வைத்தியரிடம் செல்லுங்கள்**
Tel.......................

அவசரகால அழைப்பிற்கு: Sanitätsnotruf Tel. 144

நீங்கள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகியிருப்பின்
சம்பவத்திற்குப் பின் உடனடியாக (எந்த நேரமானாலும்) Fontana பெண்கள் வைத்தியசாலைக்குச் செல்லலாம்

Frauenspitals Fontana **(Frauen)** Tel. 081 254 81 11

அல்லது மாநில வைத்தியசாலையை அணுகவும் Kantonsspital **(ஆண்கள்)**Tel. 081 256 61 11

அங்கு உங்களுக்கு மருத்துவ உதவியும் ஆதரவும் வழங்கப்படும். காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதுடன், நோய்கள் வராது தடுக்கப்படும். பின்னால் வரும் அனைத்துக் குற்ற விசாரணைக்கும் அவசியப்படுமெனில், ஒரு தடயவியல் மருத்துவப் பரிசோதனை நடத்தப்படும்.

ஒரு மருத்துவரினால் அவசியமான பரிசோதனைகள் நிகழ்த்தப்பட முன் கழுவவோ, குளிக்கவோ வேண்டாம். தடயங்கள், எத்தனை சிறியதாக இருப்பினும், குற்றவாளியைக் கண்டுகொள்வதற்கு உதவியாக இருக்கும்.

**திருமணப் பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உங்கள் வசிப்பிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தை அணுகவும்**

| | |
|---|---|
| Albula, Tiefencastel | Tel. 081 681 22 36 |
| Bernina, Poschiavo | Tel. 081 834 60 42 |
| Hinterrhein, Thusis | Tel. 081 650 07 30 |
| Imboden, Domat/Ems | Tel. 081 633 12 54 |
| Inn, Sent | Tel. 081 864 93 33 |
| Landquart, Landquart | Tel. 081 300 00 60 |
| Maloja, Samedan | Tel. 081 852 18 17 |
| Moesa, Roveredo | Tel. 091 827 33 66 |
| Plessur, Chur | Tel. 081 254 46 60 |
| Prättigau/Davos, Klosters | Tel. 081 420 27 00 |
| Surselva, Ilanz | Tel. 081 920 00 40 |

வன்முறையில் ஈடுபடும் அல்லது வன்முறை அச்சுறுத்தல் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள், வன்முறையில் ஈடுபடும் நபர்களுக்கான ஆலோசனை மையத்தை அணுகலாம். இவர்கள் நீங்கள் எவ்வாறு வன்முறையற்ற வழியில் பிரச்சனையைத் தீர்ப்பது என்பதைக் கற்க உதவுவார்கள்.

**வன்முறையில் ஈடுபடும் நபர்களுக்கான ஆலோசனை மையம்**
Beratungsstelle für Tel. 079 544 38 63
Gewalt ausübende Personen
Gäuggelistr. 16 / Brunnenhof
7000 Chur
www.gewaltberatungsstelle.gr.ch

உங்கள் முக்கிய பிரச்சனை துர்ப்பழக்கத்திற்கு அடிமையானதில் (உ-ம்: மது) தங்கியுள்ளதெனில்
அல்லது மேலதிக உதவி தேவையெனில்
உங்கள் பகுதியின் பிராந்திய சமூகசேவை மையம்

Chur நகரவாசிகள், Trin வட்டாரம், Rhäzüns, Churwalden மற்றும் Schanfigg ,ல் வசிப்பவர்கள், துர்ப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கான கேள்விகளுக்கான சமூகசேவை மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்

Sozialdienst für Suchtfragen, Loestrasse 37, Chur Tel. 081 257 26 91

உங்களுக்குப் பிரிவின் காரணமாக அவசரப் பணத் தேவை ஏற்பட்டால், பிராந்திய சமூகசேவை மையத்தையும் தொடர்பு கொள்ளலாம்.

குடும்பத்திலிருக்கும் இளம் பிள்ளைகள் வன்முறையில் ஈடுபட்டால்
குழந்தைகள் மற்றும் இளையோர் மனநலச் சேவை

Kinder- und Jugendpsychiatrischer Dienst (KJP) Tel. 081 252 90 23

www.kjp-gr.ch

**உதவிக்கரம் Die Dargebotene Hand Tel. 143**
www.143.ch

**சுய உதவிக் குழு சம்மந்தமான தகவல்கள்**

சுய உதவிக் குழுவினருடன் தொடர்புக்கு Tel. 081 353 65 15

செவ்வாய், புதன் 9 - 11 மணி

www.teamselbsthilfe.ch

(Logo)
Interventionsprojekt gegen Häusliche Gewalt Graubünden
Ein Projekt der Stabsstelle für Chancengleichheit von Frau und Mann des Kantons Graubünden

(Logo)
Kantonspolizei Graubünden